*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 345/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.கிருஷ்ணன் த/பெ. வெள்ளையன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28.07.2026.**

துவக்க நேரம் 01.10 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி (ராமராஜ்) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தம்மம்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 5 வருடத்திற்கு முன்பு மாசி மாதம் ஒருநாள் தம்மம்பட்டி கிராமத்தை சேர்ந்த சுரேஷ் என்பவரின் வீட்டில் அவரது பணம் ரூ.1 இலட்சம் திருடுபோய்விட்டது.

2) மேற்படி சம்பவம் குறித்து தம்மம்பட்டி போலிசார், சம்பவயிடத்திற்கு வந்து பணம் காணாமல் போனது குறித்து விசாரித்து, என் முன்னிலையில் படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். போலிசார், அங்கு வந்து எழுதியதற்கு சாட்சியாக என்னை ஒரு கையெழுத்து போடச்சொன்னார்கள். நானும் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2 வது கையெழுத்து என்னுடையது தான். ( பார்வை மகஜரில் 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் மணிவேல் என்பவரும் கையெழுத்து செய்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார், என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் ஒரு வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டு கொடுத்தேனா என்றால் எழுதிய தாளில்தான் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.17 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.28 17:33:33 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 345/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-6)***

*Name / Father's Name:* ***திருமதி.தங்கமணி க/பெ. மணிவேல்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **28.07.2026.**

துவக்க நேரம் 01.18 A.N

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி (ராமராஜ்) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தம்மம்பட்டியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒருநாள் தம்மம்பட்டி கிராமத்தை சேர்ந்த சுரேஷ் என்பவரின் வீட்டில் அவரது பணம் ரூ.1 இலட்சம் திருடுபோய்விட்டது.

2) நான், மேற்படி சுரேசின் பக்கத்து வீட்டுக்காரர் ஆவேன். மேற்படி சம்பவம் குறித்து சுரேஷ், காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். மேற்படி சம்பவம் குறித்து தம்மம்பட்டி போலிசார், சம்பவயிடத்திற்கு வந்து பணம் காணாமல் போனது குறித்து விசாரித்து, எதிரி மணிகண்டன் **(இந்த வழக்கு சம்மந்தமான பணம் கைப்பற்றப்பட்ட மணிகண்டன் என்பவர் இளஞ்சிறார் என்பதால், சேலத்தில் உள்ள இளஞ்சிறார் நீதிகுழுமத்தில் வழக்கை நடத்தி, அந்த வழக்கு தற்பொழுது முடிக்கப்பட்டுவிட்டது)** வீட்டிற்கு சென்று காணாமல் போன பணத்தை காவல் உதவி ஆய்வாளர், என் முன்னிலையிலும், எனது கிராமத்தை சேர்நத் வைத்தீஸ்வரி என்பவர் முன்னிலையிலும் மணிகண்டனிடமிருந்து கைப்பற்றினார்கள்.

3) என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் 1 வது கையெழுத்து என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** என்னுடன் வைத்தீஸ்வரி என்பவரும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார், என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்கதான் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

முடிவு நேரம் 01.17 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.28 17:33:41 +0530

Judicial Magistrate No.2, Attur.